# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.163/2018

**Deposition of Witness for : P.W.21**

**Name :** திரு.அன்பரசு

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரிகள் 1 முதல் 6 ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.10.2023.**

முதல் விசாரணை -

நான் பூந்தமல்லி அரசு பணிமனையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். இறந்த சுரேஷ் எங்கள் பணிமனையில் நடத்துனராக தடம் எண்.66ல் பணிபுரிந்திருந்தார். 12.1.2017 அன்று கடைசியாக எங்கள் பணிமனையில் பணி செய்தார். அதன்பிறகு பணிக்கு வராததால் வருகையின்மையாக இருந்தார்.

21.1.2017 அன்று தூசி காவல்நிலையத்தில் இருந்து காவல் ஆய்வாளர் தகவல் சொன்னதன் அடிப்படையில் தான் சுரேசின் இறப்பு பற்றி தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக சுரேஷின் பணி குறித்த அறிக்கை என்னிடம் பெறப்பட்டது. நீதிமன்றத்தில் உள்ள அறிக்கை தான் நான் கொடுத்தது. நான் வழங்கிய இறந்த சுரேஷின் பணி அறிக்கை அ.சா.ஆ.28. இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை

சுரேஷின் பணி பதிவேடானது எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்தது என்றால் தலைமை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்தது. வருகை பதிவேடு எங்கு பராமரிக்கப்பட்டது என்றால் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்து. இறந்த சுரேஷின் வருகை பதிவேடு நகல் போலிசார் என்னிடம் கேட்கவில்லை நான் கொடுக்கவும் இல்லை என்றால் சரி தான்.

12.1.2017-க்கு பிறகு இறந்த சுரேஷ் பணிக்கு வராதது குறித்து விடுப்பு கடிதம் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. 21.1.2017 அன்று சுரேஷ் இறந்த நிலையில் எத்தனை நாட்கள் பிறகு காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்றால் மூன்று நாட்கள் கழித்து என் அலுவலகத்தில் வந்து விசாரணை செய்தார். விசாரணை செய்த அன்றே நான் அறிக்கை கொடுத்தேன் என்றால் சரி தான்.

எந்தவொரு அறிக்கை கொடுத்தாலும் தேதியிட்டு கொடுப்பது வழக்கம் என்றால் சரி தான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவும் இல்லை நான் அறிக்கை

எதுவும் அந்த தேதியில் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். வழக்கிற்காக போலிசார் தயாரித்து எழுதி வைக்கப்பட்டிருந்த தாளில் நான் முத்திரையிட்டு கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல.

அதனால் தான் நான் கொடுத்த அறிக்கையில் 27.5.2017 என்ற தேதி போடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது என்றால் அழிக்கப்பட்டுள்ளது உண்மை. பக்க கையொப்பத்திலும் 27.5.2017 அன்று போடப்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.